## திராவிடத்தால் வாழ்கிறோம்

776

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## ‘மைனாரிட்டி’ தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

2

**தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்**

# யார் சிறுபான்மையினர்?

## இந்திய ஒன்றியத்திற்கே பாடமெடுத்த கழகம்!



“ஜனநாயகம் என்பது மத, மொழி, இன, பாலின ரீதியாக சிறுபான்மையாக இருக்கும் மக்களை, பெரும்பான்மையினர் எப்படி நடத்துகிறார்கள் என்பதில்தான் இருக்கிறது”உலகம் முழுவதும் ஜனநாயகத்துக்கான அடிப்படைக் கோட்பாடு இதுவே. இத்தகைய கோட்பாடுகளைக் கொண்டு நிறுவப்பட்ட கழகம் நம்முடையது.

கடந்த நூறு ஆண்டுகால தமிழக வரலாற்றினைப் புரட்டினால், சமூகநீதி பேசும் அரசியல் இயக்கமாக உதித்த நீதிக்கட்சி தொடங்கி, இன்றுவரையிலும் சிறுபான்மை மக்கள் மீது திராவிட இயக்கங்கள் கொண்டிருக்கிற சமூக பாதுகாப்பு அரண், அந்தக் கோட்பாட்டு அடிப்படையிலானதுதான் என்பதை, நாம் உணரமுடியும்.

கடந்த 2006-11 வரையிலான ஆட்சிக் காலத்தில் கழகத்தின் ஆட்சியை ‘மைனாரிட்டி அரசு’ என எதிர்க்கட்சியினர் விமர்சனம் வைத்தபோது, ‘ஆமாம், இது மைனாரிட்டி அரசுதான்’ என விமர்சனங்களைப் புறந்தள்ளி விட்டு, அனைத்து மைனாரிட்டிகளையும் காக்கும் அரசாக நல்லாட்சி வழங்கினார் முத்தமிழறிஞர் கலைஞர். மத, இன, மொழி, பாலின வகையில், அனைத்து சிறுபான்மையினர் தரப்பையும் அரவணைத்துச் செல்லும் அரசியல் இயக்கமாக இன்று இந்தியாவிலேயே கழகம் மட்டும்தான் உள்ளது.

உலகின் வல்லரசு நாடுகளில் ஒன்றான, அமெரிக்காவிலே பாலின சமத்துவம் குறித்த கண்ணோட்டம் பாரபட்சமானதுதான் என்பதை, சமீபத்தில் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் பதவியேற்பிலேயே அறிந்தோம். கருப்பு- வெள்ளைப் பாகுபாடு மட்டுமல்ல; ஆண்- பெண் இரண்டு இனம் மட்டுமே அங்கீகரிக்கப்படும் என ஒரு நாட்டின் அதிபரே சொல்லும் அளவுக்கு, அங்கு ஜனநாயகம் கேலிக்கூத்தாகியிருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் ஆண்- பெண் தவிர, பாலின சிறுபான்மையினரான ‘திருநர்’ சமூகத்துக்கும் சமத்துவத்தை நிலைநாட்டும் அரசாக தி.மு.கழக ஆட்சி நடந்து கொண்டு இருக்கிறது. அவர்களுக்கு ‘திருநர்’ என மதிப்புமிக்க அடையாளப் பெயர் அளித்தவர், நமது சமத்துவத் தலைவர் கலைஞர்தான்.

### யார் சிறுபான்மையினர்?

யார் சிறுபான்மையினர், அவர்களை எப்படி வரையறுப்பது என்பதைப் புரிந்து கொள்வதன்மூலம், நமது ஜனநாயகத் தன்மையை, நாம் சோதித்துப் பார்த்துக் கொள்ள முடியும்.

கடந்தகால தமிழ்நாட்டின் வரலாற்றில் பிரிட்டிஷார் வருவதற்கு முன்னும், பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலும் யார் சிறுபான்மையினராக அடையாளம் காணப்பட்டனர், அவர்களின் நிலைமை என்ன என்பதைப் புரிந்துகொண்டால், நாம் இன்றைக்கு அடைந்துள்ள அரசியல் வளர்ச்சியை உணர்ந்து கொள்ள முடியும்.

ஆம், அன்றைய கால கட்டத்தில் மத ரீதியாக முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மட்டும் சிறுபான்மையினர் என்று சொல்ல முடியாமல், இந்து உயர்சாதியினர் என சொல்லப்படுவோர் தவிர, அனைத்து சாதியினருமே சிறுபான்மையினர்தான் என்கிற வகையில், ஒடுக்குமுறைகள் இருந்தன. வர்ண அமைப் பின்படி ஒடுக்கப்பட்ட பட்டியலின மக்கள் மட்டும் உரிமைகளை இழந்தவர்களாக இல்லை. பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட சாதிப் பிரிவினர் அனைவருமே சிறுபான்மையினர் என்கிற வகையில்தான் வர்ணக் கோட்பாடு வரையறுத்து வைத்திருந்தது. இன்னும் குறிப்பாகச் சொல்லவேண்டுமெனில், இந்து உயர் சாதிப்பிரிவின் பெண்கள்கூட சிறுபான்மையினர்தான் என்கிற வகையில், உயர் சாதி ஆணாதிக்கப் பெரும்பான்மை அனைவரையும் அடக்கி வைத்திருந்தது.

இவர்கள் அனைத்து வகையிலும் ஒடுக்கப் பட்டவர்களாக இருந்தனர். அரசுப் பணிகளில் போதிய பிரதிநிதித்துவம் கிடையாது. அல்லது குறிப்பிட்ட சாதியினர் குறிப்பிட்ட வேலைதான் செய்ய வேண்டும் என்று ஒதுக்கப்பட்டிருந்தது. கல்வி பெறுவதிலும் பல கட்டுப்பாடுகள் இருந்ததை அறிவோம். அந்த வரம்புகளை மீறுபவர்களுக்குக் கடும் தண்டனைகளையும், உயர்சாதி ஆணாதிக்கம் ஏற்பாடு செய்திருந்தது.

அப்படியான ஒடுக்குமுறைக்கு எதிராக, அன்றைய சென்னை மாகாணத்தில் கிளர்ந்த இயக்கம்தான் நீதிக்கட்சி. அனைவருக்குமான உரிமைகளை முன்னிறுத்தியதுடன், கல்வி வேலைவாய்ப்புகளில் வகுப்புவாரியான உரிமைகளைக் கேட்டு ஒடுக்கப்பட்டவர்களுக்குக் குரல் எழுப்பும் இயக்கமாக நீதிக்கட்சி, அரசியல் அரங்கில் முன்னிலைக்கு வந்தது. நீதிக்கட்சி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர்தான், ‘அனைவரையும் உள்ளடக்கியது தான் ஜனநாயகம்’ என்கிற அரசியலும் மக்களுக்குத் துலக்கமாகத் தெரியத் தொடங்கியது.

> **கருப்பு - வெள்ளைப் பாகுபாடு மட்டுமல்ல; ஆண் - பெண் இரண்டு இனம் மட்டுமே அங்கீகரிக்கப்படும் என ஒரு நாட்டின் அதிபரே சொல்லும் அளவுக்கு, அங்கு ஜனநாயகம் கேலிக்கூத்தாகியிருக்கிறது.**

### பெரும்பான்மை வாதம்

இந்தியா சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு, யார் சிறுபான்மையினர் என்பது குறித்த பார்வைகளில் நிறைய மாற்றங்கள் நிகழ்ந்தன. பெரும்பாலும், மத அடிப்படையில் சிறுபான்மையாக இருப்பவர்கள்தான், சிறுபான்மையினராகக் கருதப்படுகின்றனர். யார் சிறுபான்மையினர் என்று கேள்வி எழுப்பினால், இந்தியாவில் முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், பார்சிகள் ஆகிய ஐந்து மதத்தினருக்கு சிறுபான்மை அந்தஸ்து இருந்து வருகிறது. 2014 -ஆம் ஆண்டு ஜனவரி முதலாக சமண மதத்தினருக்கும் தேசிய அளவில் சிறுபான்மையின அந்தஸ்து வழங்கத் திட்டமிடப்பட்டது. அதாவது யாரெல்லாம் இந்து என்கிற பிரிவில் இல்லையோ, அவர்கள் சிறுபான்மையினர் என்கிற அடையாளம் உருவானது.

இந்திய குடியரசின் குடிமக்களுக்கு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்பு -25 (1 ) இன் படி மதச்சுதந்திரத்தை அனுபவிக்கவும், கடைப்பிடிக்கவும், பரப்பவும் சம உரிமை உண்டு. சிறுபான்மையினருக்கு தங்கள் கலாச்சாரத்தைக் காத்துக்கொள்ளவும், கல்வி நிலையங்களை அமைத்துக்கொள்ளவும், நிர்வாகம் செய்யவும் உரிமை உள்ளது என்பதையும், நாம் புரிந்துக்கொள்ள வேண்டும்.

வர்ணாசிரமத்தால் ஒடுக்குமுறைகளைச் சந்தித்த சாதிகளும், இந்து என்கிற ஒற்றை அடையாளத்தை உருவகித்துக் கொண்டு, பெரும்பான்மைவாதம் பேசத் தொடங்கினர். அதனடிப்படையில், உருவாக்கப்பட்ட பிரச்சாரங்களால் இன்றைக்கும் இந்திய அளவில் பல மாநிலங்களில் இஸ்லாமியர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினர் மீது, பல்வேறு விதமான தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

சிறுபான்மையினர் மீது நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த வெறுப்பரசியலுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாடு என்றென்றைக்கும் அனைத்து மக்களையும் அரவணைத்துச் செல்லும் மாநிலமாக உள்ளதை அறியமுடியும். இங்கு, இஸ்லாமியர்களையோ கிறிஸ்துவர்களையோ அந்நியர்களாகப் பிரித்துப் பார்க்கும், அரை பக்குவம் கொண்டவர்களாக மக்கள் இல்லை. நம்பிக்கைகள் வேறு வேறாக இருந்தாலும், இனமாக, மொழியாக, மதச் சிறுபான்மையினராக அவர்களுக்கு உரிய இடமளித்து ஒன்றாகவே இருந்து வருகின்றனர். எல்லோரையும் சமமாகப் பார்க்கும் இந்த பார்வைதான் கடந்த நூறு ஆண்டுகளில் திராவிட இயக்கம் சாதித்த சமத்துவம், சமூகநீதி அரசியலின் விளைவுகள் எனலாம்.

இதைத்தான் இன்றைக்கு இந்தியா கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது பெரும்பான்மை மக்களுக்கு இணையான உரிமைகளையும், சுதந்திரத்தையும், இங்குள்ள சிறுபான்மை மக்களும் பெற வேண்டும், அவர்களின் சுயமரியாதை காக்கப்பட வேண்டும்” என அன்று காந்தி வலியுறுத்தியபோது, அவரை எதிர்த்து விமர்சனங்களையும் குற்றச்சாட்டுகளையும் முன்வைத்ததுடன், அவரை துப்பாக்கிக் குண்டுக்கு இரையாக்கியவர்கள், இன்றும் சிறுபான்மையினர் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக நிற்கின்றனர்.

இந்திய ஒன்றியத்திற்கே ஜனநாயக மாண்புகளைப் பாதுகாப்பதில் முன்னோடியாக இருக்கும் நம்முடைய கழகத்துக்கு எதிராகவும், அவர்கள்தான் நிற்கின்றனர் என்பதைப் புரிந்துகொள்வது இன்றைய காலத்தின் உடனடித் தேவையாக இருக்கிறது.

...நீளும்

## கலைஞர் நாடகங்களின் இன்றைய தேவை!

‘திராவிட இயக்க இலக்கியம், இலக்கியமே அல்ல’ என்று நவீன இலக்கியவாதிகளால் ஒதுக்கப்பட்ட காலம் இருந்தது. அது பெரும்பாலும் பார்ப்பனர்களே, நவீன இலக்கியத்தை ஆக்கிரமித்திருந்த காலம். ஆனால், இப்போது திராவிட இயக்கத்தின் சமூக முக்கியத்துவம் குறித்தும், திராவிட இலக்கியத்தின் தனித்துவம் குறித்தும், நவீன எழுத்தாளர்கள் பேசத் தொடங்கியுள்ளனர். அதற்கு சமீபத்திய உதாரணம், மார்ச் 2025 ‘உயிர்மை’ இதழில் எழுத்தாளர் முருகேச பாண்டியன் எழுதியுள்ள ‘கலைஞரின் நாடகங்கள் சித்தரிக்கும் திராவிடக் கருத்தியல்’ என்னும் கட்டுரை.

பார்ப்பன மேலாதிக்கத்தை முறியடிக்கும் வகையில், தோன்றிய திராவிட இயக்கம், பகுத்தறிவு, சுயமரியாதை, சமூகநீதி என்னும் திராவிட இயக்கக் கருத்தியல் ஆகியவற்றை விவரிக்கும் முருகேச பாண்டியனின் கட்டுரை, கலைஞரின் நாடகங்களில் திராவிடக் கருத்தியல் எப்படிப் பிரதிபலிக்கப்பட்டது என்பதை விரிவாக முன்வைக்கிறது.

‘பரப்பிரம்மம்’ நாடகத்தில் முன்வைக்கப்படும் திராவிடத்தின் வரலாற்று அடிப்படை, ஆரிய எதிர்ப்பு, ‘தூக்குமேடை’ நாடகத்தில் காணப்படும் வடமொழி எதிர்ப்பு, தமிழ்ப்பற்று, ‘மணிமகுடம்’ நாடகத்தில் மூடநம்பிக்கை எதிர்ப்பு, ‘உதயசூரியன்’ நாடகத்தில் திராவிட நாட்டின் விளக்கம் என்று பல்வேறு அம்சங்களை முன்வைத்து, விரிவாக ஆராயும் கட்டுரை முக்கியமான பல பார்வைகளைக் கொண்டிருக்கிறது. இறுதியில் ‘காலங்காலமாக வைதீக சனாதனத்தையும் வருணாசிரமக் கோட்பாட்டையும் கேள்விக்குள்ளாக்கிய திராவிட இயக்கக் கருத்தியல் பின்புலத்தில் எழுதப்பட்ட கலைஞரின் நாடகங்கள் இன்றைக்கும் தேவைப்படுகின்றன’ என்கிறார் முருகேச பாண்டியன்.

## ஃப்ளாஷ்பேக்



அ.கிருஷ்ணன்



### வேதாரண்யத்தில் தளபதி!

1999-ஆம் ஆண்டு வேதாரண்யத்திற்கு, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் அவர்கள் வருகை தந்தார். அப்போது மாரியம்மன் கோவில் தெரு பகுதியில் அமைந்திருந்த, டி.சி.டபிள்யூ கட்டடத்தில் அவருக்குக் கழக வளர்ச்சி நிதி அளித்துப் புகைப்படம் ஒன்றையும் எடுத்துக்கொண்டேன். 90 வயது நிறைந்த இந்தாண்டில், இந்த நினைவுகளை அசை போட்டுக் கொண்டிருக்கிறேன்.

**– அ.கிருஷ்ணன், அவைத் தலைவர், வேதாரண்யம் கிழக்கு, நாகப்பட்டினம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கழகம் உருவானது

### தேர்தலில் நிற்பதற்கு அங்கீகாரம்!

1955-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், சென்னை, கோகலே அரங்கத்தில், கழகத்தின் சிறப்புக் கூட்டத்தில் உரையாற்றினார் பேரறிஞர் அண்ணா. அதற்கு அடுத்த ஆண்டு, திருச்சியில் கூடவுள்ள கழகத்தின் 2-வது மாநில மாநாட்டில், மிக முக்கிய முடிவுகளைக் கழகம் மேற்கொள்ள இருக்கிறது என்பதை, தனது உரையில் குறிப்பிட்டார். குறிப்பாக, ‘கழகம் தேர்தல்களில் நிற்பதற்குரிய அங்கீகாரத்தைக் கட்சித் தோழர்களிடமும், பொது மக்களிடமும் பெற உள்ளோம்’ என்று குறிப்பிட்டார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131